# JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU

## STC No.1507/2023

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Pw1 |
| Name | : Kamalakannan |
| Father/Husband's Name | : Kuppusamy |
| Village | : |
| Taluk | : Maraimalainagar |
| Calling | : |
| Age | : 40 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13.10.2025.

**குறுக்கு விசாரணை:**

நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் Contractor ஆக சாலை வேலை செய்கிறேன். நான் எதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் godrej நிறுவனத்தில் contractor JB Suresh என்பவர் ஒப்பந்தம் எடுத்தார். அதன் பேரில் நான் வேலை செய்து கொடுத்தேன். அட்வான்ஸ் தொகை சிறிது கொடுத்தார். அவர் ரூ.18,70,000 எனக்கு தர வேண்டும். பிறகு ரூ.5 லட்சத்திற்கு காசோலை கொடுத்தார். அது வங்கியில் செலுத்திய போது, போதிய பணம் இல்லை என்று திருப்பப்பட்டது. சுரேஷ்-ம் godrej நிறுவனத்தாரும் செய்து கொண்டதாக சொல்லப்படும் ஒப்பந்தத்தை நான் பார்த்தேனா என்றால் இல்லை. கமல் construction முறையாக பதிவு செய்யப்பட்ட நிறுவனம் என்றால் சரிதான். என்னுடைய நிறுவனம் முறையாக பதிவு செய்யப்பட்ட நிறுவனம் என்பதற்கான ஆவணம் நான் ஏதேனும் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். மதசா.ஆ5 ஒப்பந்தம் என்றால் சரிதான். மதசா.ஆ5ல் எத்தனை மீட்டர் சாலை போட்டோம் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மதசா.ஆ5ல் ரூ.18,70,000 சாலை போடுவதற்கு தேவைப்படுகிறது என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மதசா.ஆ5ல் 4100 என்று திருத்தம் செய்ததற்கு கையெழுத்து ஏதும் போடவில்லை என்றால்

சரிதான். மதசா.ஆ5ல் எத்தனை நாட்களுக்குள் வேலை முடித்தவுடன் பணம் தர வேண்டும் என்று குறிப்பிடவில்லை என்றாலும், வேலை செய்ததற்கான சாலையின் தரத்தை ஆய்வு செய்த பிறகு பணம் தருவதாக குறிப்பிடவில்லை என்றாலும் சரிதான். சாலை போடுவதற்கு தேவைப்பட்ட ரூ.18,70,000 செலவு செய்து நான் சாலையை போட்டு முடித்தேனா என்றால் இல்லை. மொத்த தொகை ரூ.32,50,605/- அதற்கு பகுதி தொகையாக சிறிது பணம் முன் தொகையாக கொடுத்தார். அதன் பிறகு மீதம் ரூ.18,70,000 கொடுக்க வேண்டும். அதற்கு ரூ.5 லட்சத்திற்கு காசோலை கொடுத்தார். அதை வங்கி செலுத்திய போது, போதிய பணம் இல்லை என்று திருப்பப்பட்டது. புகாரிலும், பிரமாண வாக்கு மூலத்திலும் ரூ.32,50,605/- தொகையை பற்றியும், ரூ.18,70,000/- தொகையை பற்றியும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அந்த சாலையை தரமாக முழுமையாக போட்டு முடித்துவிட்டேன் என்பதற்கான ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. மதசா.ஆ5ல் சாலை போடுவதற்கு தொகை பற்றி விவரங்கள் மற்றும் Terms and conditions குறிப்பிடவில்லை என்றால் இல்லை. மதசா.ஆ5 ஒப்பந்தம் இல்லை கொட்டேஷன் என்றால் சரியல்ல. அதில் ஒப்பந்தம் போடுபவர், ஒப்பந்தம் பெறுபவர் என்று வாசகம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ரூ.5 லட்சத்திற்காக காசோலை கொடுக்கும் போது, சாலையின் பணி முழுமையாக முடிந்துவிட்டது என்றால் சரிதான். எதற்காக நான் ரூ.18,70,000 கேட்கவில்லை என்றால் அதை கேட்டபோது, ரூ.5 லட்சத்திற்கான காசோலை கொடுத்தார். புகாரிலும், பிரமாண வாக்குமூலத்திலும் ரூ.18,70,000 கேட்டபோது, 5 லட்சத்திற்கான காசோலை கொடுத்தார் என்ற விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. காசோலையை நான் சென்று வாங்கி வந்தேனா என்றால் நான் தான் சென்று வாங்கி வந்தேன். ரூ.18,70,000 தர வேண்டும் சம்பந்தமாக புகார் ஏதும் காவல்நிலையத்தில் கொடுத்தேனா என்றால் இல்லை.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu.